கம்பராமாயணம்

# சூர்ப்பணகைப் படலம்

★

## திருக்குறள்

30ஆம் அதிகாரம் தொடக்கம்
39ஆம் அதிகாரம் வரை

★

S. S. Rajendran

English Course

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலக்குமணரும் சீதையும் கோதாவரி நதியைக் காணுதல்

புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகட டாங்கி யைந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்
[றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார். 1

இரண்டு கவிகள் — கோதாவரி வருணனை

வண்டுறை கமலச் செவ்வி வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை யொண்க ணொருங்குற நோக்கி யூழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவுறு காத லாலிங் கிரைத்திரைத் தேங்கியேங்கிப்
பழுவநாட் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்த நோக்கி
அழுவது மொத்த தாலவ் வலங்குநீ ராறு மன்னே. 3

இது முதல் மூன்று கவிகள் - இராமனும் சீதையும்
அந்நதியின் வளங்களைக் காணுதலைத் தெரிவிக்கும்

நாளங்கொ ணளினப் பள்ளி நயனங்க ளனைய நேமி
வாளங்க ளுறைவ கண்டு மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளங்கொள் சிலையோன் மற்றை நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம் வைத்தன்ன சுடர்மணித் தடங்கள்
கண்டாள். 4

நளினம் - தாமரை ; பள்ளி - படுக்கை ; நயனங்களனைய - கண்களைப் போன்ற ; நேமி - சக்கரம் ; சிலை - வில் ; நாளம் - காம்பு.

தண்டையுடைய தாமரைப் படுக்கையிலே உ கண்களைப் போன்று இணைபிரியாமலிருக்கும் சக்கரவாகப் பறவைகளை இராமன் கண்டு சீதையுடைய மார்பகங்களைப் பார்ப்பான். அதே போல் நீண்ட வில்லையுடையவனை இராமனின் [illegible] சீதையும் உயர்ந்த இராமனுடைய தோளில் மனம் வைத்தது போன்ற தடங்கள் கண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகும்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவடானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். 5

வில்லிய றடக்கை வீரன் வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிக ணுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்கு ஞேக்க
எல்லியங் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டா ளண்ணறன் வடிவு கண்டாள். 6

நடக்கை - நீண்ட கைகள்; பாங்கர் - அருகே
வல்லி - கொடி; நுடங்க - அசைந்து ஆட;
மருங்கு - இடை; எல்லி - நீலநிறம்; கானம் - காடு;
அல்லி - இதழ்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் முதலியோர் பஞ்சவடி சேர்ந்து தங்குதல்

அனையதோர் தன்மை யாலங் கருவிநீ ராற்றின் பாங்கர்ப்
பனிதரு படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்
தனியிட மதனை நண்ணித் தம்பியாற் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை யெய்தி யிருந்தன னிராம னிப்பால். 7

அப்படிப்பட்ட தன்மையோடு கூடிய அருவிநீரையுடைய ஆற்றினது பக்கத்திலே குளிர்ச்சி பொருந்திய அழகிய பஞ்சவடியென்கின்ற பருவமான சோலையின் தனி இடத்தை அடைந்து தம்பியினாலே செய்யப்பட்ட இனிய பூஞ்சாலையை அடைந்து இராமன் இங்கே இருந்தான்.

இரண்டு கவிகள் — சூர்ப்பணகையின் தன்மை

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள் ;
மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள். 8

(இது முதல் மூன்று கவிகள் - ஒரு தொடர்)

நிருதர் - அரக்கர் ; மேலைநாள் - முன்னாள்
தான் விளை காலமோர்ந்து - தான் வெளிப்படுவதற்கேற்ற தருணத்தை எதிர்பார்த்து; உடனுறை - கூட இருந்து; கடிய நோயனாள் - கொடிய நோயைப் போன்றவள்.

நீலமணி போன்ற நிறத்தையுடைய அரக்கர் மன்னனை அடியோடு அழித்துக் கொல்லும் தன்மையுடையவள்; முன்னாளில் உயிரோடு பிறந்து தான் வெளிப்படுவதற்குரிய தருணம் பார்த்திருந்து உயிரோடு கூட இருக்கின்ற கொடிய நோயைப் போன்றவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினுள்
உம்பரா னவர்க்குமொண் டவர்க்கு மோதநீர்
இம்பரா னவர்க்குமோ ரிறுதி யீட்டுவாள். 9

செம்பராகம் - செம்பு நிறம்; வெம்பராகு - கொடிய இராகுப்பாம்பின் கரிய நிறம்; ஒண்டவர் - தவம் செய்பவர்.

சிவந்த அடர்த்தியான கூந்தலை யுடையவள், கொடிய இராகுவின் ஒப்பற்ற கரிய நிறத்தை யுடைய உடம்பை உடையவள், தேவ லோகத்திலுள்ளவர்களுக்கும், சிறந்த தவத்தைச் செய்கின்றவர்களுக்கும் இவ்வுலகிலுள்ளவர்களுக்கும் ஒரே முடிவைக் காட்டக் கூடியவள்.

சூர்ப்பணகை இராமன் இருந்த இடத்துக்கு வருதல்

வெய்யதோர் காரண முண்மை மேவினள்
வைகலுந் தமியளவ் வனத்து வைகுவாள்
நொய்தினிவ் வுலகெலா நுழையு நோன்மையாள்
எய்தின ளிராகவ னிருந்த சூழல்வாய். 10

கொடியதொரு காரணத்தை உடையவளும் என்றும் காட்டில் தனித்திருப்பவளும் விரைவாக இந்த உலகின் எப்பாகத்திலும் செல்லக் கூடிய தன்மை யுடையவளுமான சூர்ப்பணகை இராமன் இருந்த இடத்தை அடைந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூர்ப்பணகை இராமனைக் காணுதல்

எண்டகு மிமையவ "ரரக்க ரெங்கண்மேல்
விண்டனர் விலக்குதி"யென்ன . மேலைநாள்
அண்டசத் தருந்துயி றுறந்த வையனைக்
கண்டனன் டன்கிளைக் கிறுதி காட்டுவாள். 11

மதிக்கத் (எண்ணத்) தகுந்த தேவர் விஷ்ணுவை அடைந்து, "அரக்கர் எங்களைத் தாக்குகின்றார்கள் எங்களைக் காப்பாற்றுவீராக என்று கூற முன்னொரில் ஆதிசேடனென்னும் பாம்பிலிருந்து நித்திரை விட்டெழுந்து இராமனாய்ப் பிறந்தவனை தனது இனத்தவருக்கு முடிவைக் காட்டக் கூடியவளாகிய சூர்ப்பணகை கண்டாள்.

### இரண்டு கவிகள் - சூர்ப்பணகை பொதுவாக
இராமனது திருமேனியழகில் ஈடுபடுதலைக் கூறும்

சிந்தையி னுறைபவற் குருவந் தீர்ந்ததால்
இந்திரற் காயிர நயன மீசற்கு
முந்திய மலர்க்கணோர் மூன்று நான்குதோள்
உந்தியி னுலகளித் தாற்கென் றுன்னுவாள். 12

மன்மதனுக்கு (மனதில் உறைபவனாகிய) உருவம் அழிந்தது இந்திரனுக்கோ ஆயிரம் கண்கள் சிவனுக்கோ மலர்க் கண்கள் மூன்று உலகத்தை வயிற்றில் அடக்கிக் காத்த விஷ்ணுவுக்கோ தோள்கள் நான்கு என்று நினைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவ னன்றுதொட் டின்று காறுந்தான்
நற்றவ மியற்றியவ் வநங்க னல்லுருப்
பெற்றன ளுமெனப் பெயர்த்து மெண்ணுவாள். 13

அடர்த்தியான சடை

இராமனது கையழகில் ஈடுபாடு

தரங்களி னமைந்துதாழ்ந் தழகின் சார்பின
மரங்களு நிகர்க்கல மலையும் புல்லிய
உரங்களி னுயர்திசை யோம்பு மானையின்
கர ஓகளே யிவன்மணிக் கரமென் றுன்னுவாள். 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமனது தோளழகில் ஈடுபாடு

வின்மலை வல்லவன் வீரத் தோளொடும்
கன்மலை நிகர்க்கில கனிந்த நீலத்தின்
நன்மலை யல்லது நாம மேருவும்
பொன்மலை யாதலாற் பொருவ லாதென்பாள். 15

### இராமனது மார்பினழகில் ஈடுபாடு

தாளுயர் தாமரைத் தளங்க டம்மொடும்
கேளுயர் நாட்டத்துக் கிரியின் றேற்றத்தான்
தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நீளிய வல்லக ணெடிதுமார் பென்பாள். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனது திருமுகமண்டலத்தில் ஈடுபாடு

அதிகநின் றொளிருமிவ் வழகன் வாண்முகம்
பொதியவிழ் தாமரைப் பூவை யொப்பதோ
கதிர்மதி யாமெனிற் கலைக டேயுமம்
மதியெனின் மதிக்குமோர் மறுவுண் டென்பரால். 17

இராமனது தவவடிவத்தில் ஈடுபாடு

எவன்செய வினியவிவ் வழகை யெய்தினேன்
அவஞ்செயத் திருவுடம் பலச நோற்கின்றான்
நவஞ்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவஞ்செயத் தவஞ்செய்த தவமெ னென்கின்றாள். 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியழகில் ஈடுபாடு

உடுத்தநீ ராடைய ளுருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவள்
அடித்தலந் தீண்டலி னவனிக் கம்மயிர்
பொடித்தன போலுமிப் புல்லென் றுன்னுவாள். 19

திருமேனியொளியில் ஈடுபாடு

வாணிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
காணல னேகொலோ கதிரி ஞயகன்
சேணெலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையின்
நாணலன் மீமிசை நடக்கின் ருனென்ருள். 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதர சௌந்தரியத்தில் ஈடுபாடு

குப்புறற் கரியமாக் குன்றை வென்றுயர்
இப்பெருந் தோளவ ளிதழுக் கேற்பதோர்
ஒப்பென வுலகமே லுரைக்க வொண்ணுமோ
துப்பினிற் றுப்புடை யாதைச் சொல்லுகேன் 21

### இடையழகில் ஈடுபாடு

நற்கலை மதியுற வயங்கு நம்பிதன்
எற்கலை திருவரை யெய்தி யேமுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மாலென்றாள் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியழகில் ஈடுபாடு

தொடையமை நெடுமழைத் தொங்க லாமெனக்
கடைகுழன் றிடைநெறி கரிய குஞ்சியைச்
சடையெனப் புனைந்தில னென்னிற் றையலார்
உடையுயி ருடையுமென் றுன்னிநிற் கின்றாள். 23

முழு மெய்யழகில் ஈடுபாடு

நாறிய நகையணி நல்ல புல்லினால்
ஏறிய செவ்விமே லியற்று மோவென
மாறகன் முழுமணிக் கரசின் மாட்சிதான்
வேறொரு மணியினால் விளங்கு மோவென்றாள். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமேனியின் நல்லிலக்கணவமைதியில் ஈடுபாடு

கரந்தில னிலக்கண மெடுத்துக் காட்டிய
பரந்தரு நான்முகன் பழிப்புற் றானரோ
இரந்திவ னிணையடிப் பொடியு மேற்கலாப்
புரந்தர னுலகெலாம் புரக்கின் றானென்றாள், 25

### வேட்கை விஞ்சிக் கலங்குதல்

நீத்தமும் பரவையுங் குறுக நெஞ்சிடைக்
கோத்தவன் புணர்விடை குளிப்ப மீக்கொள
ஏத்தவும் புரியவொன் றீக லான்பொருள்
காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினாள். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூர்ப்பணகையின் நிலைமை

வான்றனில் வரைந்ததோர் மாத ரோவியம்
போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்
தோன்றறன் சுடர்மணித் தோளி னுட்டங்கள்
ஊன்றினள் பறிக்கவோ ரூற்றம் பெற்றிலள். 27

## சூர்ப்பணகை இராமனைச் சேரத் துணிந்து அவனெதிரிற் செல்ல வழிதேடல்

நின்றன ளிருந்தவ னெடிய மார்பகம்
ஒன்றுவ னன்றெனி னமுத முண்ணினும்
பொன்றுவென் போக்கினி யரிது போன்மெனச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள். 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பணகை அழகிய வடிவங்கொள்ளக் கருதுதல்

எயிறுடை யரக்கியெவ் வுயிரு மிட்டதோர்
வயிறுடையாளென மறுக்கு மாதலால்
குயிறொடர் குதலையோர் கொவ்வைச் செவ்விவாய்
மயிறொட ரியலியாய் மருவ னன்றெனு. 29

சூர்ப்பணகை மந்திரபலத்தால் அழகிய வடிவு பெறுதல்

பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அங்கையி னுயமந் திரத்தை யாய்ந்தனள்
திங்களிற் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினள். 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பணகை இராமனெதிரில் வருதலைத் தெரிவிக்கும்

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடி ~~பெயர்ப்பாளன்~~ யள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞைஞெயென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள். 31

பொன்ஞெழுகு பூவிலுறை பூவையெழில் பூவை
பின்னெழில்கொள் வாளிணை பிறழ்ந்தொளிர் முகத்தாள்
கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன. 32

(இதுவும் அடுத்த கவியும் குளகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானினுயர் கற்பக முயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநிறைவாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி கொண்டோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள். 33

இரண்டு கவிகள் - இராமன் சூர்ப்பணகையைப் பார்த்ததைக் கூறும்

நூபுரமு மேகலையு நூலுமற லோதிப்
பூமுரலும் வண்டுமிவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னுக்
கோமகனு மத்திசை குறித்தெதிர் விழித்தான். 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன
வண்ணமுலை கொண்டிடை வணங்கவரு போழ்தத்து
எண்ணருளி யேழைமை துடைத்தெழு மெய்ஞ்ஞானக்
கண்ணருள்செய் கண்ணனிரு கண்ணினெதிர் கண்டான். 35

இராமன் அவளைக்கண்டு வியத்தல்

பேருழைய நாகருல கிற்பிறிதின் வானில்
பாருழையி னில்லதொரு மெல்லுருவு பாரா
ஆருழைய டங்குயழ கிற்கவதி யுண்டோ
நேரிழையர் யாவரிவர் நேரென நினைத்தான். 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பணகை இராமனருகில் வந்து வணங்கி நிற்றல்

அவ்வயினவ் வாசைத னகத்துடைய வன்ளுள்
செவ்விமுக முன்னியடி செங்கையி னிறைஞ்சா
வெவ்விய நெடுங்கணயில் வீசியயல் பாரா
நவ்வியி னொதுங்கியிறை நாணியய னின்ருள். 37

இராமன் சூர்ப்பணகையை நோக்கி வினுவல்

தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதவுள தெம்முழையொர் புண்ணிய மதன்ரு
ஏதுபதி யேதுபெயர் யாவருற வென்ருன். 38
வேதமுதல் பேதையவ டன்னிலை விரிப்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூர்ப்பணகை இராமனுக்குத் தன்னைத் தெரிவித்தல்

பூவிலோன் புதல்வன்மைந்தன் புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவனான செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளிமலையெடுத் துலகமூன்றுங்
காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னியென்றாள். 39

## இராமன் சங்கித்து மீண்டும் வினாவல்

அவ்வுரை கேட்டவீர னையுறுமனத்தான் செய்கை
செவ்விதன்றறித லாகுஞ் சிறிதினென் றுணராச் செங்கண
வெவ்வுரு வமைந்தோன்றங்கை யென்பதுமெய்ம்மையாயின்
இவ்வுரு வினைந்த தன்மைமியம்புதி யியல்பினென்றான். 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதற்கு அவள் விடை கூறுதல்

தூயவன் பணியா முன்னஞ் சொல்லுவாள் சோர்விலாளம்
மாயவல் லரக்க ரோடு வாழ்வினை மதிக்க லாதேன்
ஆய்வுறு மனத்தே னாகியறந்தலை நிற்பதானேன்
தீவினை தீய நோற்றுத் தேவரிற் பெற்றதென்றாள். 41

### இராமன் மீண்டும் வினவல்

இமையவர் தலைவனேயு மெளிமையி னேவல்செய்யும்
அமைதியி னுலகமூன்று மாள்பவன் றங்கையாயின்
சுமையுறு செல்வத் தோடுந் தோன்றலை துணையுமின்றித்
தமியைநீ வருதற்கொத்த தன்மையென் றையலென்றான். 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவள் விடை கூறுதல்

வீரனஃ துரைத்தலோடு மெய்யிலாள் விமலயானச்
சீரிய ரல்லார் மாட்டுச் சேர்கிலென் றேவர்பாலும்
ஆரிய முனிவர் பாலுமடைந்தனெ னிறைவ வீண்டோர்
காரிய முண்மை நின்னைக் காணிய வந்தேனென்ருள். 43

இராமன் அவளை வந்த காரியமென் னென்றல்

அன்னவ ளுரைத்தலோடு மையனு மறிதற் கொல்லா 44
நன்னுதன் மகளிர்சிந்தை நன்னெறிப் பாலவல்ல
பின்னிது தெரியுமென்னுப் பெய்வளைத் தோளியென்பால்
என்னகா ரியத்தை சொல்லஃதினையுமே லிழைப்ப லென்ருன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அவள் தன் கருத்தை வெளியிடுதல்

தாமுறு காமத்தன்மை தாங்களே யுரைப்பதென்பது 45
ஆமென லாவதன்றா லருங்குல மகளிர்க்கம்மா
ஏமுறு முயிர்க்கு நோவே னென்செய்கேன் யாரு மில்லேன்
காமனென்றொருவன் செய்யும் வன்மையைக் காத்தியென்றாள்

### அது கேட்ட இராமன் அவள் தன்மையை நிச்சயித்தல்

சேணுற நீண்டு மீண்டு செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏணுற மிளிர்ந்து நாணாவிதம்புரண் டிருண்ட வாட்கட்
பூணியல் கொங்கை யன்னா ளம்மொழி புகறலோடும்
நாணில ளையய னொய்ய ணல்லளு மல்ல ளென்றான். 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பணகை மீட்டும் தன் கருத்தைச் சொல்லத் தொடங்குதல்

பேசல னிருந்தவள்ள ளுள்ளத்தின் பெற்றியோரரள் 47
பூசல்வண் டரற்றுங் கூந்தற்பொய்ம்மகள் புகன்ற வெங்கண்
ஆசைகண் டருளிற் றுண்டோவன்றெனலுண்டோ வென்னும்
ஊசலா லுலாவு கின்ருள் மீட்டுமோ ருரையைச் சொல்வாள்

சூர்ப்பணகை தன்கருத்தை வேறு வகையால் வெளியிடுதல்

எழுதரு மேனி யாயீண் டெய்திய தறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவ ரேவற் செய்தொழின் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மையோடு மிளமையும் பயனின்றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலுமென்ருள்.48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன், பார்ப்பனமாதை அரசர் மணம்புரியலாகா தென்றல்

நிந்தனை யரக்கி நீதிநிலையிலாள் வினைமற் றெண்ணி
வந்தன ளாகு மென்றே வள்ளலு மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற் கொத்த தொன்மையின் றுணிவிற் றன்றால்
அந்தணர் பாவை நீயா னரசரில் வந்தே னென்றான். 49

அதற்குச் சூர்ப்பணகை சமாதானங் கூறல்

ஆரண மறையோ னெந்தை யருந்ததி கற்பி னெம்மோய்
தாரணி புரந்த சால கடங்கடர் மரபின் றையல்
போரணி பொலங்கொள் வேலாய் பொருந்தலை யிகழ்தற் [கொத்த
காரண மிதுவேயாயி னென்னுயிர் காண்ப னென்றாள். 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன், அரக்கரை மனிதர் மணஞ்செய்யலாகா தென்றல்

அருத்திய ளானையகூற வகத்துறு நகையின் வெள்ளைக் 51
குருத்தெழு கின்றநீலக்கொண்டலுண்டாட்டங் கொண்டான்
வருத்தநீங் கரக்கர்தம்மின் மானுயர் மணத்த னங்கை
பொருத்தமன் றென்றுசாலப் புலமையோர் புகல்வரென்ருன்

அதற்கு அவள் சமாதானங் கூறல்

பராவரு வித்தி யாதர் பன்னியான் பவத்தை யோராது
இராவணன் றங்கை யென்ற தேழைமைப் பாலதென்பால்
அராவணை யமல னன்னு யறிவித்தேன் முன்னந் தேவர்ப்
பராவினி னீங்கி னேனப்பழிபடு பிறவியென்ருள். 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன், உரியவர் கொடாமல் மணஞ்செய்யே னென்றல்

ஒருவனே யுலக மூன்றிற் கோங்கொரு தலைவனுங்கில்
ஒருவனே குபேர னின்னே டுடன்பிறந் தவர்களன்னுர்
தருவரேற் கோடு மன்றேற் றமியையே றிடத்துச் சார
வெருவுவெ னங்கை யென்ருண் வேதத்தி னறிவை
[வென்ருன். 53

சூர்ப்பணகை கூறிய மறுமொழி

காந்தர்ப்ப மென்ப துண்டாற் காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கு மடந்தை மார்க்கு மறைகளே வகுத்த கூட்டம்
ஏந்தற்பொற் ருேளி ஞயிலி தினையந்தபி னெனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற்ருகும் வேறுமோ ருரையுண்
டென்ருள். 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரோடுடையர் முன்னே முதிர்பகைமுறைமை
நோக்கார்
தனியை நீ யாதலான்மற் றவரொடுந் தழுவற் கொத்த
வினையமீ தல்ல தில்லை விண்ணுநின் னுட்சி யாக்கி
இனியரா யன்னர் வந்துன் னேவலி னிற்ப ரென்ருள் 55

அதுகேட்டு இராமன் பரிகசித்தல்

நிருதர்த மருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னோடு
ஒருவருஞ் செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே
னென்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னு
வரிசிலை வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான் 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமயத்தில் சீதை அங்கு வருதல்

விண்ணிடை யிம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க்
செல்லாம்
கண்ணிடை யொளியின் பாங்கர்க் கடிகமழ்சாலே நின்றும்
பெண்ணிடை யரசிதேவர் பெற்றநல் வரத்தாற் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள்
வந்தாள் 57

சூர்ப்பணகை பிராட்டியைக் காணுதல்

ஊன்சுட வுணங்கு பேழ்வா யுணர்விலி யுருவநாறும் 58
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்கநோக்கி
மீன்சுடர் விண்ணு மண்ணும் விரிந்தபோ ரரக்கரென்னுங்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணிற் கண்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீதையை அரக்கி திருமகளோவென்று ஐயுறல்

மருவொன்று கூந்தலாளை வனத்திவன் கொண்டு வாரான்
உருவிங்கி துடைய ராக மற்றையோர் யாரு மில்லை
அரவிந்த மலருணீங்கி யடியிணை படியிற் றோயத்
திருவிங்கு வருவாள் கொல்லோ வென்றகந் திகைத்து
நின்றாள். 59

### அரக்கி பிராட்டியினழகை வியத்தல்

பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றா லென்படும் பிறருக் கென்றான் 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாராமரது அழகொற்றுமையை அரக்கி மதித்தல்

பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்
கருதமற் றினிவே றில்லை கமலத்து கடவுடானே
ஒருதிறத் துணர நோக்கி யுருவினுக் குலக மூன்றின்
இருதிறத் தார்க்குஞ் செய்த வரம்பிவ ரிருவ ரென்றாள் 61

அரக்கி சீதையைத் தன்னைப்போ லிடையில் வந்தவளென்று எண்ணுதல்

பொன்னைப்போ லொளிருமேனிப் பூவைப் பூவண்ணத் தானிம்
மின்னைப்போ லிடையா ளோடுமேவுமெய் யுடையனல்லன்
தன்னைப்போற் றகையோ ரில்லாத் தளிரைப்போ லடியின்ளும்
என்னைப்போ லிடையே வந்தா ளிகழ்விப்பே னிவளையென்று

(இதுவும் அடுத்த கவியும் குளகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூர்ப்பணகை இராமனிடம் சீதையைக் குறித்துப் பழித்தல்

வருமிவண் மாயம் வல்லள் வஞ்சனை யரக்கி நெஞ்சந்
தெரிவில டேறுந் தன்மை சீரியோய்செயலிற் றன்றால்
உருவமு மெய்ய தன்று ஓனுகர் வாழ்க்கை யாளை
வெருவினெ னெய்தி டாமல் விலக்குதி வீர வென்றாள் 63

### அது கேட்டு இராமன் பரிகாசமாகச் சில கூறல்

ஒள்ளிது னுணர்வு மின்னே யுன்னையா ரொளிக்கு மீட்டார்
தெள்ளிய நலத்தி னுலுன் சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளவல் லரக்கி போலா மிவளைநீ காண்டி யென்று
வெள்ளிய முறுவன் முத்தம் வெளிப்படவீர னக்கான் 64

சூர்ப்பணகை சீதையை வெருட்டல்

ஆயிடை யமுதின் வந்த வருந்ததிக் கற்பி னஞ்சொல்
வேயிடை தோளி ஞளும் வீரனைச் சேரும் வேலை
நீயிடை வந்த தென்னை நிருதர்தம் பாவை யென்னுக்
காயெரி யனைய கள்ள வுள்ளத்தாள் கதித்த லோடும். 65

(இதுவும் அடுத்த கவியும் குளகம்)

சீதை அஞ்சி இராமனைத் தழுவுதல்

அஞ்சினள் வஞ்சியன்ன மின்னிடை யலசவோடிப் 66
பஞ்சின்மெல் லடிக ளேவப் பதைத்தனள் பருவக்கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி யென்னக்
குஞ்சர மனைய வீரன் குவவுத்தோ டழுவிக் கொண்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமன், சூர்ப்பணகையை 'அப்பாற்போ' எனல்

வளையெயிற் றவர்களோடு வரும்வினை யாட்டென் றாலும்
வினைவன தீமையேயா மென்பதை யுணர்ந்து வீரன்
உளைவன வியற்றே லொல்லை யுன்னிலை யுணருமாயின்
இளையவன் முனியு நங்கை யேகுதி விரைவி னென்றான் 67

### சூர்ப்பணகை மீண்டும் வார்த்தையாடுதல்

பொற்புடை யரக்கி பூவிற் புனலினிற் பொருப்பில் வாழும்
அற்புடை யுள்ளத்தாரு மநங்கனு மமரர் மற்றும்
எற்பெறத் தவஞ்செய் கின்றா ரென்னைநீ யிகழ்வ தென்னே
நற்பொறை நெஞ்சி னில்லாக் கள்வியை நச்சியென்றாள் 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமன் அரக்கியை வெறுத்து பர்ணசாலையினுட் செல்லுதல்

தன்னொடுந் தொடர்வி லாதே மென்னவுந் தவிரா டானிக்
கன்னெடு மனத்தி சொல்லுங் கள்ளவா சகங்க ளென்னு
மின்னொடு நடந்து செல்லு மேகம் போன் மிதிலைவேந்தன்
பொன்னொடும் புனிதன் போயப் பூம்பொழிற்சாலை புக்கான்

### அப்பொழுது சூர்ப்பணகை தவித்தல்

புக்கபின் போய தென்னு முணர்வினள் பொறையி னீங்கி
உக்கதா முயிர ளொன்று முயிர்த்தில ளொடுங்கி நின்ருள்
தக்கிலன் மனத்துள் யாதுந் தழுவிலன் சலமும் கொண்டான்
மைக்கருங் குழலி னுண்மாட் டன்பினில் வலிய னென்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பணகை அப்பாற் செல்லுதலும், சூரியன் அஸ்தமித்தலும்

நின் றில ளவனைச் சேரு நெறியினை நினைந்து போனாள்
இன்றிவ னாகம் புல்லே னெனினுயி ரிழப்பெ னென்னாப்
பொன்றிணி சரளச்சோலைப் பளிக்கறைப் பொதுப்பர்ப்
புக்காள்
சென்றது பரிதி மேல்பாற் செக்கர்வந் திறுத்த தன்றே. 71

இது முதல் பதினேழு கவிகள் சூர்ப்பணகையின் காமதாப வருணனை

அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
மொழிந்த காமக் கடுங்கனன் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்றொளை வாளெயிற்று
இழிந்த கார்விட மேறுவ தென்னவே 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாட கைக்கொடி யாட்ட மார்பிடை
ஆட வர்க்கர சன்னயி லம்புபோற்
பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி யுயிருளைந் தாளரோ 73

கலையு வாமதி யேகறி யாகவன்
சிலையின் மாரனைத் தின்னு நினைப்பினுள்
மலைய மாருத மாநெடுங் காலவேல்
உலைய மார்பிடை யூன்றிட வோயுமால் 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைக்கு மாழி யடங்கிட வங்கையால்
மலைக்கு லங்களிற் றார்க்கு மனத்தினாள்
நிலைக்கும் வானி னெடுமதி நீணிலா
மலைக்க நீங்கு மிடுக்கினண் மாந்துவாள் 75

பூவெ லாய்பொடி யாகவிப் பூமியுள்
காவெ லாமொடிப் பென்னெனக் காந்துவாள்
சேவ லோடுறை செந்தலை யன்றிலின்
நாவி னால்வலி யெஞ்ச நடுங்குவாள். 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணவி றிங்களை நுங்க வராவினைக்
கொணர்வெ னோடி யெனக்கொதித் துன்னுவாள்
பணையின் மென்முலை மேற்பனி மாருதம்
புணர வாருயிர் வெந்து புழுங்குமால். 77

கைக ளாற்றன் கதிரிளங் கொங்கை மேல்
ஐய தண்பனி யள்ளின ளப்பினாள்
மொய்கொ டீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால் 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கு மெய்யுயிர் கான்றழ லஞ்சினள்
குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை வெங்க ணநங்கனை
ஒளிக்க லாமிடம் யாதென வுன்னுமால் 79

வந்து கார்மழை தோன்றினு மாமணிக்
கந்து காணினுங் கைத்தலங் கூப்புமால்
இந்து காந்தத்தி னீர நெடுங்கலும்
வெந்து காந்த வெதுப்புறு மேனியாள் 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாம மாமதி யும்பனி வாடையும்
காம னுந்தனைக் கண்டுண ராவகை
நாம வாளெயிற் றோர்கத நாகம் வாழ்
சேம மால்வரை யின்முழை சேருமால் 81

அன்ன காலை யழகன் மிகு தென்றலும்
முன்னின் மும்மடி யாய்முலை வெந்துக
இன்ன வாசெய்வ தென்றறி யாதிளம்
பொன்னின் வார்தளி ரிற்புரண் டாளரோ 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரன் மேனி வெளிப்பட வெய்யவள்
கார்கொண் மேனியைக் கண்டன ளாமெனச்
சோரும் வெள்குந் துணுக்கெனு மவ்வுருப்
பேருங் கால்வெம் பிணியிடைப் பெருமால் 83

ஆகக் கொங்கையி னையனென் றஞ்சன
மேகத் தைத்தழு வும்மவை வெந்தன
போகக் கண்டு புலம்புமப் புன்மையாள்
மோகத் துக்கொர் முடிவுமுண் டாங்கொலோ. 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழி வெங்கன லுற்றன ளொத்துமவ்
வேழை யாவி யிறந்தில ளென்பரால்
ஆழி யானை யடைந்தனள் பின்னையும்
வாழ லாமெனு மாசை மருந்தினே. 85

வஞ்சனைக் கொடு மாயை வளர்க்குமென்
நெஞ்சு புக்கென தார்வத்தை நீக்கெனும்
அஞ்ச னக்கிரி யேயரு ளாயெனும்
நஞ்ச நக்கினள் போல நடுங்குவாள். 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவி யோகய லோவெனுங் கண்ணிணைத்
தேவி யோதிரு மங்கையிற் செவ்வியாள்
பாவி யேனையும் பார்க்குங்கொ லோவெனும்
ஆவி யோயினு மாசையி னேய்விலாள். 87

மாண்ட கற்புடை யாண்மலர் மாமகள்
ஈண்டி ருக்குநல் லாண்மக னென்னுமால்
வேண்ட கிற்பின னல்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றேதெறுங் காமமே. 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மறுநாட் சூரியோதய வருணனை

ஆன்ற காத லஃதுற வெய்துழி
மூன்று லோகமு மூடு மரக்கராம்
ஏன்ற காரிரு ணீக்க விராகவன்
தோன்றி னானென வெய்யவன் றோன்றினான். 89

### இது முதல் மூன்று கவிகள் - ஒரு தொடர்
### சூர்ப்பணகை சீதையை எடுத்துக்கொண்டுபோகத் தொடங்க, இலட்சுமணன் கண்டமை கூறும்

விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட வெய்யாள்
படியி லாண்மருங் குள்ளள வெனையவன் பாரான்
கடிதி னோடினெ னெடுத்தொல்லைக் கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே வாழ்வென மதியா 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து நோக்கினள் வள்ளல்போ யொருமணித் தடத்திற்
சந்தி நோக்கின னிருந்தது கண்டன டம்பி
இந்து நோக்கிய நுதலியைக் காத்தய லிருண்ட
கந்த நோக்கிய சோலையிலிருந்தது காணுள். 91

தனியி ருந்தனள் சமைந்ததென் கருத்தெனத் தாழ்வுற்று
இனியிருந்தெனக் கெண்ணுவ தில்லென வெண்ணு
துனியிருந்தவன் மனத்தின டோகையைத் தொடர்ந்தாள்.
கனியி ரும்பொழில் காத்தய லிருந்தவன் கண்டான். 92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் அடுத்த கவியும் குளகம்

இலக்குமணன் சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தலைக் கூறும்

நில்ல டீஇயெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்
வில்லெ டாதவள் வீங்கெரி யாமென விரிந்த
சில்ல லோதியைச் செங்கையிற் றிருகுறப்பற்றி
ஒல்வ யிற்றுதைத் தொளிகிளர் சுற்றுவா ளுருவி. 93

ஊக்கித் தாங்கிவிண் படர்வெனென் றுருத்தெழுவாளை
நூக்கி நொய்தினின் வெய்திழை யேலென நுவலா
மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களு முறையாற்
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது கதறலும், இரத்தப்பெருக்கும்

அக்க ணத்தவள் வாய்திறந் தரற்றிய வமலை
திக்க னைத்தினுஞ் சென்றது தேவர்தஞ் செவியும்
புக்க துற்றது புகல்வதென் மூக்கெனும் புழையூடு
உக்க சோரியி னீரமுற் றுருகிய துலகம். 95

சூர்ப்பணகையை அங்கபங்கப் படுத்தியதன் வருணனை

கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை. 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குமணனால் தள்ளப்பட்ட சூர்ப்பணகை எழுதல்

அதிர மாநிலத் தடிபதைத் தரற்றிய வரக்கி
கதிர்கொள் காலவேற் கரன்முதனி ருதர் வெங்கதப்போர்
எதிரி லாதவ ரிறுதியி னிமித்தமா வெழுந் தாண்டு
உதிர மாரிபெய் கார்நிற மேகமொத் துயர்ந்தாள். 97

இரண்டு கவிகள் - சூர்ப்பணகை பலவாறு துயருறுநிலை தெரிவிக்கும்

உயரும் விண்ணிடை மண்ணிடை விழுங்கிடந் துழைக்கும்
அயருங் கைகுலைத் தலமரு மாருயிர் சோரும்
பெயரும் பெண்பிறந் தேன்பட்ட பிழையெனப் பிதற்றும்
துயரு மஞ்சிமுன் றொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்று மூக்கினை யுலையுறு தீயென வுயிர்க்கும்
எற்றுங் கையினை நிலத்தினி லிணைத்தடங் கொங்கை
பற்றும் பார்க்கு மெய் வெயர்க்குந்தன் பருவரன் மயக்கால்
சுற்று மோடும் போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும் 99

அவள் தன் குலத்தாரைக் குறிப்பிட்டுப் புலம்பத் தொடங்குதல்

ஊற்றுமிக்கநீ ரருவியி னொழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துட் டிரிபவ டேவரு மிரியக்
கூற்று முட்குந்தன் குலத்தினோர் பெயரெலாங் கூறி
யாற்றுகிற்கிலள் பற்பல பன்னி நின் றழைத்தாள். 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்மை 30

வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் 291
தீமை இல்லாத சொலல்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த 292
நன்மைபயக்கும் எனின்

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் 293
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் 294
உள்ளத்து ளெல்லாம் உளன்.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு 295
தானஞ்செய் வாரின் தலை.

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை 296
எல்லா அறமும் தரும்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற 297
செய்யாமை செய்யாமை நன்று.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை 298
வாய்மையான் காணப் படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் 299
பொய்யா விளக்கே விளக்கு.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்து ஒன்றும் 300
வாய்மையின் நல்ல பிற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நாங்கள்) பொய் என்று சொல்வதும் குற்றமில்லாத நன்மையைக் கொடுக்குமானால் அது வாய்மையாகக் கருதப்படும்.

× ஒருவன் தனது மனத்துக்குப் (பொய்) மாறுபாடின்றி ஒழுகுவானானால் உலகத்துள்ளோர் மனதில் எல்லாம் இருப்பான்.

× மனத்தோடு ஒருவன் உண்மை பேசுவானானால் தவமும் தானமும் செய்வோரிலும் பார்க்க மேலானவன் ஆவான்.

× பொய்யாதிருத்தலாகிய வாய்மையைத் தவிர வேறு புகழ் கிடையாதாகும். அதுவே கெடாது எல்லாத் தருமத்தையும் கொடுக்கும்.

× பொய்யாமை ஆகிய தருமத்தை ஒருவன் தவறாது செய்வானானால் வேறு தருமங்கள் செய்ய வேண்டியதில்லை.

× ஒருவருக்கு வெளிச்சுத்தம் தண்ணீரினாலே உண்டாகும். மனச்சுத்தம் வாய்மையினாலே காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெகுளாமை 31

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். 301

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. 302

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். 303

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 304

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 306

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 307

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

உள்ளியதெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 309

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னா செய்யாமை 32

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 311

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 313

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை 3!5

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 318

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். 319

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்
நோயின்மை வேண்டு பவர். [யார் 320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லாமை 33

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். 321

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. 322

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 324

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 325

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்-
செல்லாது உயிருண்ணுங் கூற்று. [மேல் 326

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 327

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. 328

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 329

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையாமை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 331

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 332

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். 334

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. 336

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. 338

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 339

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 340

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல. 342

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 343

இயல்ஆகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 344

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை. 345

யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 346

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 348

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 349

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யுணர்தல்

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 351

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. 353

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 354

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 356

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 357

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. 358

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். 359

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவா அறுத்தல்

அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 361

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல். 363

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 364

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். 365

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 366

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும் 367

அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 368

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின். 369

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி, 371

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 372

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும், 373

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு 374

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 376

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 378

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்? 379

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 380

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமாட்சி

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 382

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. 383

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு 384

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு, 385

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு 387

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். 388

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. 390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. S. Rajendran

English Course (71 – 72)

G.T.C

Vasavilan

1. புலவர் கவியில் என்ன சொல்ல விரும்புகிறார்?
2. அதை எப்படிச் சொல்லுகிறார்?

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 8452-71

① கவியின் உட்பொருள் என்ன?

② அதன் வடிவம் என்ன?

③ ஓசை, யாப்பு என்பன பொருத்தமானதா?

(௫) வாக்கிய அமைப்பு முறை கவிதைப் பொருளுக்கு ஏற்றதா?

(c.) ஏற்ற மொழி நடை (Diction)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.S. Rajendram

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org